**செய்தி வெளியீடு**

**செய்தி வெளியீடு எண்**.53/2023 **நாள்** : 12 .07.2023

**மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலிருந்து பொதுமக்களிடம் பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாதந்தோறும் ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தகவல்**

இன்று 12.07.2023 மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில் நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 13 இடங்களில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டங்களில் அடிப்படை வசதிகள் மேம்பாடு குறித்து பெறப்பட்ட மனுக்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீதான மேல்நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் ஆகியோருடனான ஆய்வுக் கூட்டம் நகராட்சி நிருவாக ஆணையரக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்ட

ஆய்வுக் கூட்டங்களின்போது பொதுமக்களிடமிருந்து குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி, சாலை மேம்பாடு, மின் வசதிகள், நீர்நிலைகளை மேம்படுத்துதல், பூங்காக்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் தொடர்பான கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த அலுவலர்களுக்கு மேல்நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட மனுக்களும் மேல்நடவடிக்கைகளுக்காக மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பெறப்பட்ட மனுக்களின் மீது பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இன்னும் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், புதிய பணிகளுக்கான திட்ட முன்மொழிவுகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியக்கூடிய அனைத்து நிலை அலுவலர்களும் பொதுமக்களிடமிருந்து பெறக்கூடிய மனுக்களின் மீதான நடவடிக்கைகளை எவ்வித தொய்வுமின்றி மேற்கொண்டு பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் பணியாற்றிட வேண்டும்.

மேலும், பொதுமக்களிடமிருந்து பெறக்கூடிய மனுக்களில் புதிய திட்டங்களுக்கான கோரிக்கைகள் வரும் பட்சத்தில் உடனடியான திட்ட

அறிக்கைகளை தயார் செய்து முன்மொழிவுகளை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். உரிய பரிசீலனைகள் மேற்கொண்ட பின்னர் அதற்கான அனுமதிகள் உரிய கால கட்டத்திற்குள் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். மாநகராட்சி, நகராட்சி ஆணையர்கள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்கள் தினந்தோறும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, குடிநீர் வழங்கல், சாலை மேம்பாடு, பூங்காக்கள் பராமரிப்பு, மின் வசதிகள், மழைநீர் வடிகால் ஆகியவற்றை தொடர்ந்து ஆய்வு செய்து வரவேண்டும். பருவமழைக்கு முன்னதாக மழைநீர் வடிகால்கள் மற்றும் பாதாள சாக்கடைகளில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலிருந்து பொதுமக்களிடம் பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும். கோரிக்கையின் விவரங்கள், கோரிக்கை மனுக்கள் பெறப்பட்ட நாள், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நாள் மற்றும் மனுக்கள் மீதான நிலை குறித்த விவரங்கள் முற்றிலுமாக ஆய்வு செய்யப்படும். எனவே, அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களும் பொதுமக்களிடமிருந்து பெறக்கூடிய மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன (TUFIDCO)த் தலைவர்/மேலாண்மை இயக்குநர் முனைவர் நீரஜ் மிட்டல், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளர் திரு, தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர உள் கட்டமைப்பு நிதிச் சேவைகள் நிறுவன (TNUIFSL)த் தலைவர் / அரசு முதன்மைச் செயலாளர் மரு.எஸ்.விஜயகுமார், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய நிருவாக இயக்குநர் திரு.இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., பேரூராட்சிகள் இயக்குநர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப., இயக்குநர்/ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் திரு.எஸ்.சிவராசு, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் செயலாளர் திருமதி.மகேஸ்வரி ரவிகுமார், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திரு.வி.சரவணன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாக துணை இயக்குநர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர்கள், மண்டல செயற்பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்